ஸ்ரீ:
ஸ்ரீமதே இராமானுஜாய நம:
ஸ்ரீமத் அநந்தார்ய மஹாகுரவே நம:
ஸ்ரீமத் வரவரமுனயே நம:



# ஸ்ரீ மதுரகவியாழ்வார் அருளிச் செய்த
# கண்ணிநுண்சிறுத்தாம்பு
# பதினோராம் பாசுர வ்யாக்யான ஸாரம்

நஞ்ஜீயர், நம்பிள்ளை அருளிச் செய்த
வ்யாக்யானத்திலிருந்து திரட்டியது

**ஆழ்வார் எம்பெருமானார் ஜீயர் திருவடிகளே சரணம்**

அடியேன் மதுரகவி தாசன்
திருமலை குன்னபாக்கம் அனந்தாண்பிள்ளை வேங்கடார்யன்

http://www.acharya.org

ஸ்ரீ:
ஸ்ரீமதே இராமானுஜாய நம:
ஸ்ரீமத் அநந்தார்ய மஹாகுரவே நம:
ஸ்ரீமத் வரவரமுனயே நம:

# கண்ணிநுண்சிறுத்தாம்பு பதினோராம் பாசுர வ்யாக்யான சாரம்

நஞ்சீயர், நம்பிள்ளை அருளிச் செய்த
வ்யாக்யானத்திலிருந்து திரட்டியது

**பதினோராம் பாசுரம்:**

அன்பன் தன்னை அடைந்தவர்கட்கெல்லாம்
அன்பன் தென்குருகூர் நம்பிக்கு
அன்பனாய் மதுரகவி சொன்னசொல்
நம்புவார் பதி வைகுந்தம் காண்மினே

**அர்த்தம்:**

தன்னை அடையும் பக்தர்களிடம் அன்பைக் கொண்டவனான எம்பெருமானிடத்தில் மிக்க பக்தியைக் கொண்டவரான நம்மாழ்வாரிடம் பக்தி பூண்டு மதுரகவி சொன்ன இச்சொற்களை நம்பி இருப்பார்க்கு இடம் வைகுந்தமாகும்.

**வ்யாக்யான சாரம்:**

இறுதியில், இப்ப்ரபந்தத்தைக் கற்றார்க்கு நம்மாழ்வார் ஆணை ஒன்றே செல்லும் தேசமான ஸ்ரீவைகுண்டமே இடம் என்கிறார். இப்ப்ரபந்தத்தைத் தஞ்சமாக நினைத்திருப்பவர்க்கு இருப்பிடம் பரமபதம் என்கிறார்.

**அன்பன்:**

ஈச்வரத்வம் எம்பெருமானுடைய முக்கிய குணமன்று; அனைத்திடமும் அன்பு காட்டுவதேயாகும் ("ரிபூணாமபி வத்சல:"). எம்பெருமான் வாத்சல்யத்தைக் கல்யாண குணமாகக் கொண்டவன். அவன் அன்பு பேதமின்றி அனைவரையும் அடையும் ("தே$_3$வானாம் த$_3$ானவானாஞ்ச சாமான்யமதி$_4$தை$_3$வதம்").

**அடைந்தவர்கட்கெல்லாம் அன்பன்:**
தன்னை அடைந்தவர் அடையாதவர் அனைவருக்கும் அன்பனாக இருப்பவன் எம்பெருமான். அப்படிப்பட்ட அன்பனை நெருங்கியவர்க்கெல்லாம் அன்பராயிருப்பவர் நம்மாழ்வார். ஆழ்வார் அருள் அனைவரையும் அடைந்தாலும் அவர் அன்பு எம்பெருமானை அடைந்தவரை மட்டுமே சேரும் ("பரமனைப் பயிலும் திருவுடையார் யாவரேலுமவர் கண்டீர் எம்மையாளும் பரமர்").

**அன்பனாய்:**
நம்மாழ்வாருக்கே அன்பராயிருப்பவர் ஶ்ரீமதுரகவிகள். அதுவே அவருடைய ஸ்வரூபம்.

**தென்குருகூர் நம்பிக்கு அன்பனாய்:**
எம்பெருமானிடத்தில் மட்டுமன்றி, அவன் அடியாரிடத்தில் மட்டுமன்றி, ஆசார்யரிடத்திலும் பற்று கொள்கிறார். தமக்கு புருஷார்த்தம் வேண்டுமாகில் எம்பெருமானை மட்டும் பற்றுவார். தாம் உகந்ததை விட எம்பெருமான் உகந்ததைப் பற்ற வேண்டுமாகில் அவன் அடியார்களைப் பற்றுவார். அவ்வடியார்களும் அவனும் உகந்ததைப் பற்ற வேண்டுமாகில் ஆசார்யரையே பற்ற வேண்டும். ஆசார்யர் முதலில் அஞ்ஞான இருளைப் போக்குபவர்; பின்னர் பகவத் குணங்களை அறிந்து அதில் ஈடுபட உதவுபவர்; அவரே அந்த பகவத் ப்ராப்திக்கு புருஷகாரம் செய்பவர்; ப்ராப்தியின் எல்லையில் இருப்பவரும் அவரே.

**மதுரகவி:**
நம்மாழ்வாரைப் பற்றி தாம் பாடிய பாடல் தமக்கே இனிதாக இருப்பதால் தம்மையே மதுரகவி என்கிறார்.

**நம்புவார் பதி வைகுந்தம் காண்மினே:**
இதைக் கற்றார்க்கு இருப்பிடமாவது பரமபதம் என்கிறார். அடைய வேண்டிய பொருள் நம்மாழ்வார் என்றால், அடைய வேண்டிய தேசம் திருநகரியாக வேண்டாமோ என்றால், திருநகரியில் பொலிந்து நின்ற பிரான் ஆணையும் நம்மாழ்வார் ஆணையும் செல்லும், ஶ்ரீவைகுண்டத்திலோ நம்மாழ்வார் ஆணை ஒன்று மட்டுமே செல்லும் ("அடியார் நிலாகின்ற வைகுந்தமோ?") என்கிறார். எம்பெருமானுக்கு அன்பனாயிருப்பவர்க்கு அவனடியாரிடத்தில் அன்பு இருக்கும்; அடியார் அனைவரிடத்திலும் அன்பு செய்பவர்க்கு நம்மாழ்வாரிடத்தில் அன்பு இருக்கும். எனவே திருநாட்டையே அடைய வேண்டிய இடமாகச் சொல்லுகிறார். அன்பர் இருக்கும் இடமே ஶ்ரீவைகுண்டம் என்கிறார். திருநாடென்றும் லீலாவிபூதியென்றும் வேற்றுமை இல்லையோ என்றால், பட்டர்

பிறந்த பின் இரண்டுக்கும் இடையில் உள்ள சுவர் மறைந்து ஒன்றானது என்னும் நம்பி திருவழுதிவளநாடு தாசர் வார்த்தையைச் சொல்லுகிறார். இப்பாடல் இனிதாக இல்லாவிட்டாலும் இப்ப்ரபந்தங்களைத் தஞ்சமாகக் கொண்டவர்களுக்கு இடம் பரமபதம் என்கிறார்.

**மதுரகவி ஆழ்வார் திருவடிகளே சரணம்**
**நஞ்சீயர் நம்பிள்ளை திருவடிகளே சரணம்**
**ஆழ்வார் எம்பெருமானார் ஜீயர் திருவடிகளே சரணம்**

அடியேன் மதுரகவி தாசன்
திருமலை குன்னப்பாக்கம் அனந்தாண்பிள்ளை வேங்கடார்யன்